**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 100/2013 |
| | | D/W's | : | DW2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | முத்துகருப்பன் | CASTE | : | |
| S/O. | சங்கிலி | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | குலசேகரன்கோட்டை | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 37 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.04.2025**

**முதல் விசாரணை**

நான் குலசேகரன் கோட்டை கிராமம் கிராம நிர்வாக அலுவலராக தற்போது பணியாற்றி வருகிறேன். 3,4,5 பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கு உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ளேன்.

1. நத்தம் நிலவரி திட்ட துாய அடங்கல் பதிவேடு குலசேகரன்கோட்டை கிராமம் நத்தம் புல எண்.580/26 பழைய புல எண்.391/6 பாகம், நத்தம் பரப்பு 0.00.23 ஏர்ஸ் இடமானது சந்து என கிராம கணக்கில் தாக்கல் ஆகி உள்ளது. மேற்படி ஆவணம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தின் கணினி பிரதி சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு சொத்தான சர்வே எண்.580/26 கிராம கணக்கில் சந்து என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சர்வே எண். 580/26 ன் அளவுகள் கிழமேல் தென்புறம் 16.5 மீட்டர் வடபுரம் 16.6 மீட்டர் மற்றும் வடதென்புரம் மேல்புறம் 1.7 மீட்டர் கிழக்கில் 1.2 மீட்டர். மேற்படி சர்வே எண் உள்ள இடத்தின் வடபுறம் சர்வே எண். 580/25, 580/24 ஆகிய இடங்கள் உள்ளது. சர்வே எண். 580/26 ன் தென்புறம் சர்வே எண். 580/27 உள்ளது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.